சார்பு நீதிமன்றம், பரமத்தி.
முன்னிலை திரு.எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 27–ஆம் நாள் திங்கட்கிழமை

அசல் வழக்கு எண். 87/2022 (CNR.No.TNNM100003602022)

வளர்மதி ... வாதி

// எதிராக //

1. கருப்பண்ணன்
2. மோகன் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 13.07.2026–ல் என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.நந்தகுமார் அவர்கள் ஆஜராகியும், 1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சேகர் அவர்கள் ஆஜராகியும், 2–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

தீர்ப்புரை

இவ்வழக்கானது, பரமத்தி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 537/1990–படி, கடந்த 14.06.1990–தேதியிட்ட பாகப்பிரிவினைப்பத்திரம் இல்லா நிலையது என்றும் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும் விளம்புகை செய்யக்கோரியும், தாவா சொத்தை நலந்திகடு கலந்து அளந்து 3–சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் 1–பாகத்தை வாதிக்கு தனியாக ஒதுக்கி தனி சுவாதீனம் கொடுக்கும் வகையில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், அதனை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணைக்கு வழிவகை செய்யக்கோரியும், வாதியின் 1/3–பங்கைப்பொறுத்து பிரதிவாதிகள் எவ்வித தடையிடர் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதியின் வழக்குரைச்சுருக்கம்</u>

i) தாவா சொத்தானது, பாகம் பிரியாத இந்து கூட்டுக்குடும்ப சொத்தாகும். 1–ம் பிரதிவாதியின் மகன் 2–ம் பிரதிவாதி, மகள் வாதி ஆவார்கள். 1–வது பிரதிவாதி இந்து கூட்டுப் குடும்பத்தின் கர்த்தா ஆவார். வாதியும், பிரதிவாதிகளும் இந்து மிதாட்சரா கூட்டுப்குடும்பத்தின் கூட்டு உரிமையாளர்கள் ஆவார்கள். வாதி, பிரதிவாதிகளுடன் இணைந்து கூட்டு சுவாதீனத்தில் உள்ளார். ஆரம்பத்தில், வழக்கின் சொத்துக்கள் ராமசாமிகவுண்டரின் மகன் கருப்பண்ணகவுண்டர் மற்றும் 1–வது பிரதிவாதியான கருப்பண்ணன் ஆகியோருக்கு பூர்வீகமான சொத்தாகும். மேற்கூறிய கருப்பண்ண கவுண்டர்–1, அவரது மனைவி திருமாயி அம்மாள்–2 மற்றும் அவர்களின் மகனான 1–வது பிரதிவாதி–3 ஆகிய மூவரும் பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தின் 24/02/1986 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் எண். 110/1986 மூலம் தங்கள் குடும்பச்சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டனர். மேற்கூறிய பாகப்பிரிவினைப்பத்திரத்தின் மூலம் 'A' அட்டவணைச்சொத்துக்கள் மேற்கூறிய கருப்பண்ண கவுண்டர்–1 மற்றும் அவரது மனைவி திருமாயி அம்மாள்–2 ஆகியோருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது. '

ii) B' அட்டவணைச்சொத்துக்கள் 1–வது பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது. அதன்பிறகு, 1–வது பிரதிவாதி மேற்கூறிய 'A' அட்டவணைச்சொத்துக்களை பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தின் 16/09/1987 தேதியிட்ட பதிவு ஆவணம் எண். 522/1987 மூலம் மேற்கூறிய கருப்பண்ண கவுண்டர் மற்றும் திருமாயம்மாள் ஆகியோரிடமிருந்து கிரையம் வாங்கினார். பூர்வீக சொத்துக்களிலிருந்து கிடைத்த வருமானத்தைக்கொண்டு, 1–வது பிரதிவாதி அவர்களின் பெற்றொரிடமிருந்து மேற்கண்ட 'A' அட்டவணைச்சொத்துக்களை கிரையம் பெற்றார். எனவே, அனைத்து சொத்துக்களும் இந்து பாகம் பிரிக்கப்படாத கூட்டுகுடும்பச்சொத்துக்கள் ஆகும். வாதி 10.06.1988 அன்று பிறந்தார். இந்து வாரிசுரிமைச்சட்டத்தின்படி, வாதிக்கு பிறப்பின் அடிப்படையில் சொத்தில் உரிமை கிடைத்துள்ளது. வாதி, 1, 2–பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களில் தலா 1/3–பங்குள்ளது. ஆனால், வாதியின் பங்கினை மறைத்து, 1–வது பிரதிவாதியும், மைனர் 2–வது பிரதிவாதியின் தாயாரும் பாதுகாவலருமான சிந்தாமணி என்பவரும் சேர்ந்து, வழக்குச்சொத்துக்கள் தொடர்பாக பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தின் 14/06/1990 தேதியிட்ட ஆவண எண். 537/1990

மூலம் ஒரு போலி மற்றும் பெயரளவுக்கான பாகப்பிரிவினைப்பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள். வாதியின் பங்கினை ஏமாற்றும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட மேற்கண்ட போலி மற்றும் பெயரளவு பாகப்பிரிவினைப்பத்திரம் வாதியைக்கட்டுப்படுத்தாது.

iii) தற்போது, வாதி கடந்த 19/07/2022 அன்று வில்லங்கச்சான்றை சரிபார்த்தபோது, மேற்கூறிய போலி மற்றும் பெயரளவு பாகப்பிரிவினைப்பத்திரம் இருப்பது தெரிய வந்தது. அதன்பின், 21/07/2022 அன்று வாதி, பிரதிவாதிகளை அணுகி சுமுகமாக பாகப்பிரிவினை செய்து தருமாறு கேட்டார், ஆனால் பிரதிவாதிகள், வாதியின் கோரிக்கையை நிராகரித்துவிட்டனர். 14/06/1990 தேதியிட்ட மேற்கண்ட பாகப்பிரிவினைப்பத்திரத்தில் வாதி ஒரு தரப்பினர் அல்ல. எனவே, பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தின் 14/06/1990 தேதியிட்ட பதிவு ஆவண எண். 537/1990 கொண்ட பாகப்பிரிவினைப்பத்திரம் செல்லாதது (null and void) என்றும், அது வாதியைக்கட்டுப்படுத்தாது என்றும் அறிவிக்க வேண்டும்; வழக்குச் சொத்துக்களை எல்லைகளுடன் 3 சம பாகங்களாகப் பிரித்து, அதில் ஒரு பங்கினை வாதிக்கு தனி சுவாதீனத்துடன் ஒதுக்கி முதல்நிலைத்தீர்ப்பாணை பிறப்பிக்கவும், இறுதித் தீர்ப்பாணை மனு தாக்கல் செய்ய அனுமதிக்கவும் வேண்டும் என்று கோரியும், வழக்குச்சொத்துக்களில் வாதிக்குரிய 1/3 பங்கினை பிரதிவாதிகள் பிறருக்கு விற்பனை செய்யாதவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டும் என்று கோரியும், வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>1–ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

i) வாதியின் தாவா சுத்தப்பொய்யும் மோசடியுமானது, சட்டப்படிக்கும் நியாயப் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. உடனே தள்ளுபடியாகத்தக்கதாகும். இந்த பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளே வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவராவார். தாவா பிராது 3வது பாராவில் காட்டப்பட்டுள்ள உறவு முறைகள் சரியானவை. தாவா சொத்துக்கள் இந்த பிரதிவாதி மற்றும் அவருடைய பெற்றோர்களான கருப்பண்ணகவுண்டர் மற்றும் திருமாயி அம்மாள் ஆகியோர்களுக் கிடையே குடும்ப பாகப்பிரிவினை 24.02.1986 தேதியிட்ட பத்திரம் மூலம் பாகப்பிரிவினை ஆகி, மேற்படி பாகப்பிரிவினையில் A செட்யூலில் சொத்துக்கள் 1ம்

பிரதிவாதியின் தகப்பனார் கருப்பண்ண கவுண்டர் மற்றும் 1ம் பிரதிவாதியின் தாயார் திருமாயி அம்மாள் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டது என்றும் B செட்யூலில் சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்பது சரியானவை. அதன் பின்னிட்டு மேற்படி A செட்யூல் சொத்துக்களை 1ம் பிரதிவாதி பூர்வீக சொத்துக்களில் இருந்து கிடைக்க பெற்ற வருமானத்தை கொண்டு தன்னுடைய பெற்றோர் களிடமிருந்து கடந்த 16.09.1987 தேதியிட்ட கிரயப்பத்திரம் மூலமாக கிரயம் பெற்றுள்ளார் என்பதும் சரி. தாவா சொத்துக்கள் பூராவும் பாகம்பிரியாத ஓர் இந்து கூட்டு குடும்ப சொத்துக்கள் என்பதும் சரி. பிராது 5–வது பாராவில் கண்டுள்ள சங்கதிகளை வாதியே நிரூபிக்க வேண்டும்.

ii) வாதி கடந்த 10.06.1988 தேதியில் பிறந்தார் என்பது உண்மை. ஆனால், மேற்படி பாராவில் காட்டப்பட்டுள்ள இதர சங்கதிகள் சரியல்ல. உண்மையில் வாதி பெண் பிள்ளை என்பதால் பின்னிட்டு குடும்ப சொத்துக்களில் பாகத்திற்கு வந்துவிடக்கூடாது என்று 1ம்பிரதிவாதியின் உறவினர்கள் சிலர் கூறியதன் பேரில் கடந்த 14.06.1990 தேதியில் பெயரளவிற்கு ஒரு பாகப்பிரிவினை பத்திரத்தை தயாரித்து வாதியை அந்த பத்திரத்தில் காட்டாமல் வாதியின் பாக உரிமையை மறைத்து ஆண் மகனான 2ம் பிரதிவாதிக்கு பெரும் அளவிலான சொத்துக்கள் சேர்வதை போன்று பெயரளவிற்கு வாசகங்களை எழுதி அக்கால மைனராக இருந்த 2ம் பிரதிவாதிக்கு கார்டியன் என்ற முறையில் அவருடைய தாயார் சிந்தாமணியை காட்டி மேற்படி பத்திரம் தயாரித்து பதிவு செய்யப்பட்டது. ஆனால் பூரா சொத்துக்களும் இன்று வரை உபவாதிகளின் கூட்டு சுவாதீனத்திலேயே இருந்து வருகிறது. 1ம் பிரதிவாதிக்கும், அவருடைய மனைவி சிந்தாமணிக்கும் வயோதிகம் ஆகிவிட்டதால் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு அன்ன ஆகாரம் கொடுக்காமல் கொடுமை செய்து வருகிறார். தாவா சொத்துக்களில் வாதியின் பங்கு உரிமையை 1ம்பிரதிவாதி மறுக்கவில்லை. ஆகையால், மேற்கண்ட சங்கதிகளை அனுசரித்து தீர்ப்பு செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. <u>2–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரைச்சுருக்கம்,</u>

i) வாதியின் தாவா சுத்தப்பொய்யும் மோசடியுமானது. சட்டப்படிக்கும், நியாயப் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. உடனடியாக தள்ளுபடியாகத்தக்கது. இந்த 2ம் பிரதிவாதி தனது பதிலுரையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க வேண்டும். தாவா சொத்து பரமத்தி கிராமத்தில் உள்ளது என்பது சரி. தாவா பிராதின் 3–வது பாராவில் சொல்லியுள்ள உறவுமுறை சரி. ஆனால் தாவா சொத்து பிரிவினை செய்யப்படாத கூட்டுக்குடும்ப சொத்து என்ற சங்கதி பொய்யானது. வாதியும், பிரதிவாதிகளும் இந்து மித்தாக்ஷர சட்டப்படிக்கு கூட்டுக்குடும்ப உறுப்பினர்கள் என்றும், தாவா சொத்தின் கூட்டு உரிமையாளர்கள் என்றும், வாதி கூறியுள்ள சங்கதி சுத்த பொய்யானது. பிரதிவாதிகளுடன் சேர்ந்து வாதி Constructive கூட்டு சுவாதீனத்தில் உள்ளார் என்ற சங்கதி தவறானது. வாதி தனது தாவா பிராதின் 4–வது பாராவில் பூர்வீக சொத்துக்களை கருப்பண்ணக்கவுண்டர், அவரது மனைவி திருமாயி அம்மாள் மற்றும் அவரது மகனான 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் கடந்த 24.02.1986–ந் தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் A ஜாபிதா சொத்து கருப்பண்ணகவுண்டர் மற்றும் அவரது மனைவி திருமாயிஅம்மாள் ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றும், B ஜாபிதா சொத்து 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றும், பின்னர் A ஜாபிதா சொத்தை கருப்பண்ணகவுண்டர் மற்றும் அவரது மனைவி திருமாயி அம்மாள் ஆகியோரிடமிருந்து 1ம் பிரதிவாதி கடந்த 16.09.1987–ந் தேதியில் கிரயம் பெற்றுள்ளார் என்று கூறியுள்ள சங்கதிகள் சரியானவை.

ii) வாதி தனது தாவா பிராது 5–வது பாராவில் ஏதோ, வாதி கடந்த 10.06.1988–ந் தேதியில் பிறந்தார் என்றும், இந்து வாரிசுரிமைச்சட்டப்படிக்கு வாதிக்கு பிறப்பின் அடிப்படையில் உரிமையுள்ளது என்றும், அதன்படி தாவா சொத்துக்களில் கர்த்தா என்ற முறையில் 1–ம் பிரதிவாதிக்கு 1/3 பாகமும், 2–ம் பிரதிவாதிக்கு 1/3 பாகமும், வாதிக்கு 1/3 பாகமும் பாத்தியம் உள்ளது என்று கூறியுள்ள சங்கதி தவறானது. வாதிக்கு இந்து வாரிசுரிமைச்சட்டப்படி தாவா சொத்தில் உரிமை ஏற்படுவதற்கு முன்னரே குடும்ப சொத்தானது கடந்த 14.06.1990–ந் தேதியில் பாகப்பிரிவினை செய்யப்பட்டுவிட்டது. அவ்வாறு இருக்க தாவா சொத்தில் வாதிக்கு யாதொரு உரிமையும், பாத்தியமும் பாகமும் ஏற்படாது.

iii) வாதியின் பாட்டனார் கருப்பண்ணகவுண்டருக்கு ஒரே ஆண் வாரிசு 1ம் பிரதிவாதி கருப்பண்ணன் ஆவார். மேற்படி இப்பிரதிவாதியின் பாட்டனார் கருப்பண்ணகவுண்டரும், அவரது மனைவி திருமாயி அம்மாள் மற்றும் அவர்களது மகனான 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் பூர்வீக சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்து, கடந்த 24.02.1986–ந் தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டனர். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் கருப்பண்ணகவுண்டர் மற்றும் அவரது மனைவி திருமாயி ஆகியோர்களுக்கு A செட்யூல் சொத்துக்களும், 1ம் பிரதிவாதிக்கு B செட்டியூல் சொத்துக்களும் ஒதுக்கப்பட்டன. பின்னர் 1ம் பிரதிவாதி தன்னுடைய தகப்பனார் மற்றும் தாயாரான கருப்பண்ணகவுண்டர்–திருமாயிஅம்மாள் தம்பதியிடமிருந்து கடந்த 16.09.1987–ந் தேதியில் A செட்யூல் சொத்தினை கிரயம் பெற்று 1ம் பிரதிவாதி அனுபவித்து வந்தார்.

iv) 2–ம் பிரதிவாதி கடந்த 20.05.1985–ந் தேதியில் பிறந்தார். 2ம் பிரதிவாதி மைனராக இருக்கும் போது, 2ம் பிரதிவாதியின் தாயார் கார்டியனாக இருந்து, 2ம் பிரதிவாதியும், 1ம் பிரதிவாதியும் கடந்த 14.06.1990–ந் தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டனர். அதன்படிக்கு 1ம் பிரதிவாதிக்கு A செட்யூல் சொத்தும், 2ம் பிரதிவாதிக்கு B செட்யூல் சொத்துக்களும் ஒதுக்கப்பட்டன. 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட A செட்யூல் சொத்தானது பரமத்தி கிராம ச.எண்.17/1J ஆகும். அதன் விஸ்தீரணம் ஏக். 0.52 செண்ட் அளவுள்ள நிலமாகும். மேற்படி சொத்தை 1–ம் பிரதிவாதி தன் பெயருக்கு பட்டா மாற்றி தனிசுவாதீனத்தில் அனுபவித்து வருகிறார். அதேபோல் 2ம் பிரதிவாதிக்கு கடந்த 14.06.1990–ம் தேதி பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட B செட்டியூல் சொத்தினை 2ம் பிரதிவாதி தனிப்பட்ட தன் சுவாதீனத்தில் தக்க வைத்து இன்றளவும் அனுபவித்து வருகிறார். தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2 முதல் 7 வரையிலான அயிட்ட சொத்துக்களை 2ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார். தாவா 8, 9, 10–வது அயிட்ட சொத்துக்களானது கூட்டுக்கிணறு என்பதால் 2ம் பிரதிவாதி மற்ற கூட்டு உரிமையாளர்களுடன் சேர்ந்து பொதுவாகவும், கூட்டாகவும் அனுபவித்து வருகிறார். தாவா சொத்துக்களானது கடந்த 14.09.1990–ந் தேதியில் பாகப்பிரிவினையாகி விட்டது. மேற்படி தேதியில் வாதி கூட்டுகுடும்ப உறுப்பினர் அல்ல.

v) இந்து வாரிசுரிமைச்சட்டப்படிக்கு வாதி கூட்டுகுடும்ப உறுப்பினராக இல்லாத காரணத்தினால் வாதிக்கு சட்டப்படி அப்போது உரிமை ஏதும் கிடையாது. தாவா சொத்துக்களானது கடந்த 14.09.1990–ந் தேதியில் பாகப்பிரிவினை செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் தனித்தனியாக சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு அனுபவிக்கப்பட்டு வந்ததால் தாவா சொத்தில் முழுமையான பாகப்பிரிவினை கடந்த 14.09.1990–ந் தேதியிலேயே ஏற்பட்டுவிட்டது. தாவா சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்பட்ட விவரம் வாதிக்கு பல ஆண்டுகளுக்கு முன்பே தெரியும். தாவாவானது காலவரையறை தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்து வாரிசுரிமை திருத்தச் சட்டம் 2005–இன் படிக்கு ஏற்கனவே பாகப்பிரிவினை செய்யப்பட்ட சொத்திற்கு வாதி பாகப்பிரிவினை கோர முடியாது. ஆகையால், தாவா சொத்துக்களில் வாதிக்கு யாதொரு உரிமையும், பாகமும் ஏற்படாது. அதனால், வாதி தாவாவில் கேட்டுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு சட்டப்படி கிடைக்காது. வாதி தாவாவில் கோரியுள்ள 1/3 பாகம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. ஆகையால் வாதியின் தாவா தள்ளுபடியாகத்தக்கதாகும். வாதிக்கு தாவா சொத்தில் யாதொரு பாகமோ, உரிமையோ இல்லாத காரணத்தினால் தாவா சொத்தினை வில்லங்கப்படுத்தக்கூடாது என்று வாதி கோருவதற்கு யாதொரு சட்ட அருகதையும் வாதிக்கு கிடையாது. அதனால் தாவா பிராதில் வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக்கூடியது அல்ல. ஆகவே, வாதியின் இந்த தாவாவை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. <u>2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரைச்சுருக்கம்,</u>

i) வாதியின் தாவா சுத்தப்பொய்யும் மோசடியுமானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. உடனடியாக தள்ளுபடியாகத்தக்கது. இந்த பிரதிவாதி தனது கூடுதல் பதிலுரையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க வேண்டும். வாதியும், 1ம் பிரதிவாதியும் வஞ்சகக்கூட்டுடன், 2ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த தாவாவினை நடத்தி வருகிறார்கள். 2ம் பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு, 1ம் பிரதிவாதி தன் தரப்பில் யாதொரு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யாமல் இருந்து Ex–

Party–ஆக அவருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, 2ம் பிரதிவாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்து படித்துப்பார்த்து அறிந்து, அதன்பின்னர் 1ம் பிரதிவாதி Ex–Party உத்தரவை இரத்து செய்து தன் தரப்பில் எதிர்வழக்குரை வாதிக்கு ஆதரவாக வஞ்சகக்கூட்டுடன் தாக்கல் செய்துள்ளார். வாதியும், 1ம் பிரதிவாதியும் தாவா பிராதிலும், எதிர்வழக்குரையிலும் கூறுவது போல் தாவா சொத்துக்கள் பூராவும் பாகம் பிரியாத இந்து கூட்டு குடும்ப சொத்துக்கள் என்பது பொய்யான சங்கதியாகும்.

ii) 1ம் பிரதிவாதி தன் தாவா எதிர்வழக்குரையில் கூறுவது போல், ஏதோ வாதி பெண் பிள்ளை என்பதால் பின்னிட்டு குடும்ப சொத்துக்களில் பாகத்திற்கு வந்துவிடக்கூடாது என்று 1ம் பிரதிவாதியின் உறவினர்கள் சிலர் கூறியதன் பேரில் கடந்த 14.06.1990–ஆம் தேதியில் பெயரளவிற்கு ஒரு பாகப்பிரிவினை பத்திரத்தை தயாரித்து வாதியை அந்த பத்திரத்தில் காட்டாமல் வாதியின் பாக உரிமையை மறைத்து, ஆண் மகனான 2ம் பிரதிவாதிக்கு பெருமளவிலான சொத்துக்கள் சேர்வதை போன்று பெயரளவிற்கு வாசகங்களை எழுதி அக்கால மைனராக இருந்த 2ம் பிரதிவாதிக்கு கார்டியன் என்ற முறையில் அவருடைய தாயார் சிந்தாமணியை காட்டி மேற்படி பத்திரம் தயாரித்து பதிவு செய்யப்பட்டது என்ற சங்கதிகள் அனைத்தும் தவறானவை, வேண்டுமென்றே வாதிக்கு ஆதரவாக 1ம் பிரதிவாதியால் கூறப்பட்ட பொய் சங்கதிகளாகும். தாவா சொத்துக்கள் பூரா இன்றுவரை உபவாதிகளின் கூட்டு சுவாதீனத்திலேயே இருந்து வருவதாக கூறும் சங்கதி சுத்த பொய். 1ம் பிரதிவாதிக்கும், அவருடைய மனைவி சிந்தாமணிக்கும் வயோதிகம் ஆகிவிட்டதால், 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு அன்ன ஆகாரம் கொடுக்காமல் கொடுமை செய்து வருவதாக கூறும் சங்கதியும் சுத்த பொய். தாவா சொத்துக்களில் வாதியின் பங்கு உரிமையை 1ம் பிரதிவாதி மறுக்கவில்லை என்ற சங்கதியும் வேண்டுமென்றே எழுத்துமூலமாக ஏற்படுத்தப்பட்ட பத்திரத்திற்கு எதிராக 1ம் பிரதிவாதி கூறும் மோசடி சங்கதிகளாகும்.

iii) தாவா சொத்துக்கள் ஆதியில் 2ம் பிரதிவாதியின் முப்பாட்டனார் ரங்கசாமிக்கு கடந்த 07.07.1942 மற்றும் 14.09.1948 கிரையப்பத்திரங்கள் படிக்கும், 1ம் பிரதிவாதியின் பாட்டனார் கருப்பண்ணகவுண்டருக்கும் 11.04.1961–ந் தேதியிட்ட கிரையப்பத்திரப்படிக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்களை 1ம் பிரதிவாதியும், அவரது பெற்றோர்களான கருப்பண்ணகவுண்டர் மற்றும் அவரது மனைவி திருமாயம்மாள் கடந்த 24.02.1986–ந் தேதியில் பாகப்பிரிவினை செய்ததில்

பரமத்தி கிராம ச.எண்.17/1J நிலத்தில் சுமார் 52 செண்ட் அளவுள்ள நிலத்தினை வைத்துக்கொண்டு மற்ற சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக B செட்யூல் சொத்தாக ஒதுக்கியுள்ளனர். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் போது வாதி பிறக்கவே இல்லை. மேற்படி பாகப்பிரிவினை பத்திரப்படிக்கு பரமத்தி கிராம ச.எண்.17/1J நிலத்தை பின்னர் கிரையம் பெற்ற 1ம் பிரதிவாதி தானாக மேற்படி சொத்தினை வைத்துக்கொண்டு 24.02.1986–ந் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக B செட்யூலாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் முழுவதையும் மைனராக இருந்த 2ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 14.06.1990 தேதியில் பாகப்பிரிவினை மூலமாக ஒதுக்கி பாத்தியம் வழங்கியுள்ளார். அப்போது சுயசிந்தனையுடன் 1ம் பிரதிவாதி மைனராக இருந்த 2ம் பிரதிவாதிக்கு ஆதரவாக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொடுத்துவிட்டு தற்போது வேண்டுமென்றே வாதிக்கு ஆதரவாக தாவா சொத்துக்கள் பொறுத்தான 14.06.1990–ந் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் அமுலுக்கு வரவில்லை என்றும், மேற்படி பத்திரம் பெயரளவில் ஏற்பட்டது என்றும், தாவா சொத்துக்கள் முழுவதும் இன்றளவும் பாகம்பிரியாத இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்களாக இருப்பதாக ஒரு பக்க சார்பாக வேண்டுமென்றே கூறி கட்சி செய்து வருகிறார்.

iv) 1–ம் பிரதிவாதிக்கும், 2–ம் பிரதிவாதிக்கும் கடந்த 14.06.1990–ஆம் தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் பெயரளவிலான பத்திரம் அல்ல. மேற்படி பத்திரம் உண்மையானது, அமுலுக்கு கொண்டுவரப்பட்டதும் ஆகும். 1ம் பிரதிவாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 14.06.1990–ஆம் தேதியில் நடைபெற்ற பாகப்பிரிவினை பத்திரம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டு பரமத்தி கிராம ச.எண்.17/1J (தாவா 1வது அயிட்ட சொத்து) தவிர்த்து மற்ற அயிட்ட சொத்துக்களான 2 முதல் 7 வரையிலான அயிட்ட சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சுவாதீனத்தில் அனுபவிக்கப்பட்டு வருகிறது. தாவா 8 முதல் 10 அயிட்ட சொத்துக்கள் கூட்டுக் கிணறு என்பதால் மற்ற கூட்டு உரிமையாளருடன் சேர்ந்து பொதுவாகவும், கூட்டாகவும் அனுபவிக்கப்பட்டு வருகிறது. அதேபோல், தாவா 1வது அயிட்ட சொத்தானது, 1ம் பிரதிவாதியால் தனிப்பட்ட அனுபவிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு இருக்க தாவா சொத்துக்களில் பாகப்பிரிவினை கோர வாதிக்கு எவ்வித அருகதையோ, முகாந்திரமோ கிடையாது. ஆகையால் வாதி தாக்கல் செய்துள்ள தாவாவை தள்ளுபடி

செய்ய வேண்டியது அவசியம். ஆகவே, வாதியின் இந்த தாவாவை இப்பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கூறி, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. வாதியின் வழக்குரை, எதிர்வழக்குரைகள், கூடுதல் எதிர்வழக்ரை ஆகியவற்றை பரிசீலனை செய்து 06.01.2024–ஆம் தேதியன்று கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

எழுவினா 1	முதலாவது பிரதிவாதி, கூட்டுக்குடும்ப வருமானத்திலிருந்து வந்த பணத்திலிருந்து கடந்த 24.02.1986–ம் தேதிய பாகப்பிரிவினையில் அவரது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை, கடந்த 16.09.1987–ம் தேதி கிரையம் பெற்றாரா?
எழுவினா 2	வழக்குரைச்சொத்துக்கில், வாதிக்கு 1/3–பங்குள்ளதா ?
எழுவினா 3	வழக்குரைச்சொத்துக்களைப்பொறுத்து, கடந்த 14.06.1990–ம் தேதிதியில், பிரதிவாதிகள் செய்து கொண்ட பாகப்பத்திரம் பெயரளவிற்கு ஏற்பட்டதா?
எழுவினா 4	வாதி, கடந்த 14.06.1990–ம் தேதிய பாகப்பிரிவினைப்பத்திரத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் பெற அருகரா?
எழுவினா 5	வாதி பாகபிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் பெற அருகரா?
எழுவினா 6	வாதி, நிரந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற அருகரா?
எழுவினா 7	உபயதரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

7. வாதி தரப்பில் வா.சா.1–விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1–முதல் 5–வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1, 2–பிரதிவாதிகள் தரப்பில், பி.சா.1, 2–சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பி.சா.ஆ.1–முதல் 5–வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

<u>வாதி தரப்பு வழக்கறிஞரின் வாதுரையின் சுருக்கம்</u>

8. இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதி, வாதி மற்றும் 2–ம் பிரதிவாதியின் தந்தையாவார். கடந்த 24.12.1986–தேதியில், 1–ம்பிரதிவாதியும், அவரது குடும்பத்தாரும் சேர்ந்து பூர்வீக சொத்துக்களைப்பொறுத்து ஒரு பதிவு பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள். அந்த பத்திரத்தில் கண்ட A அட்டவணைச்சொத்துக்கள், வாதியின் பாட்டனார் கருப்பண்ணகவுண்டருக்கும், வாதியின் பாட்டி திருமாயி அம்மாளுக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது. B அட்டவணை சொத்துக்கள் வாதி மற்றும் 2–ம் பிரதிவாதியின் தகப்பனாரான 1–ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது. பின்னர், பூர்வீக சொத்திலிருந்து வந்த வருவாயைக்கொண்டு, 1–ம் பிரதிவாதி மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் வாதியின் பாட்டானருக்கும், பாட்டிக்கும் பாகமாக ஒதுக்கப்பட்ட A அட்டவணை சொத்துக்களை கடந்த 16.09.1987–தேதியில், கிரையம் பெற்றார். ஆகவே, மேற்படி பாகப்பிரிவினை மூலம் 1–ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட B அட்டவணை சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாகும். மேற்படி பூர்வீக சொத்திலிருந்து 1–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற மேற்படி A அட்டவணை சொத்துக்கள் ஆகிய வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்களாகும். வாதி கடந்த 10.06.1988–தேதியில் பிறந்ததால், பிறப்பின் அடிப்படையில் அவருக்கு தாவா சொத்துக்களில் 1/3–பாகம் உரிமையுள்ளது. இந்நிலையில், வாதியின் பாக உரிமையை மறைத்து கடந்த 14.06.1990–தேதியில், 1, 2–பிரதிவாதிகள் பெயரளவிற்கான பாகப்பிரிவினை பத்திரத்தை கடந்த 14.06.1990–தேதியன்று ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள். மேற்படி ஆவணம் பற்றி வாதிக்கு தெரிந்த பின்பு தாவா சொத்துக்களில் வாதிக்குள்ள பாகத்தை பிரித்துக்கொடுக்க கேட்டதில் அவர்கள் மறுத்துவிட்டார்கள். அதனால், வாதிக்குரிய பாகத்தை பிரித்துத்தரக்கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதி குறிப்பிட்டுள்ள உறவுமுறை குறித்து ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆனால், ஏற்கனவே பாகம் பிரித்துவிட்டதால் வாதிக்கு வழக்கு சொத்துக்களில் பாகம் இல்லை என்று மறுத்துள்ளது சரியல்ல. 1, 2–பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்ட கடந்த 14.06.1990–தேதிக்கு முன்பாகவே, 1986–ம் ஆண்டு வாதி பிறந்துள்ளார். அதனால், வழக்கு சொத்துக்களில் வாதிக்கு பிறப்பின் அடிப்படையில் பாகம் உள்ளது. ஆனால், வழக்கு சொத்துக்களில்

வாதிக்கு பாகம் உள்ள நிலையில், அவரைப்பற்றி மேற்படி ஆவணத்தில் குறிப்பிடாமல் 1, 2–பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் செல்லத்தக்கதல்ல. பி.சா.1–ஆக விசாரிக்கப்பட்டுள்ள 1–ம் பிரதிவாதி அவரின் குறுக்கு விசாரணையில் பாகப்பிரிவினை பத்திரம் பெயரளவிற்கு ஒப்புக்காக எழுதப்பட்டது என்றும் வழக்கு சொத்துக்களில் நான் தான் என் மகளுக்காகவும் விவசாயம் செய்து வருகிறேன் என்று மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் பெயரளவிற்கு ஏற்பட்டது என்று வாதி கூறியுள்ளதை ஏற்று சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.2–ஆக விசாரிக்கப்பட்டுள்ள 2–ம் பிரதிவாதி வா.சா.ஆ.4–பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள வாசகங்கள் எனது சகோதரி வளர்மதியை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே, மேற்படி 1, 2–பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்டுள்ள பாகப்பிரிவினை பத்திரம் பெயரளவிற்கு ஏற்பட்டது என்பதை ஏற்று சாட்சியம் அளித்துள்ளார்கள். அதனால், மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டதால் வாதிக்கு வழக்கு சொத்துக்களில் பாகம் இல்லை என்று 2–ம் பிரதிவாதி ஆட்சேபணை செய்துள்ளது சரியல்ல. 2–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கு சொத்துக்களில் உள்ள வீடுகளைப்பற்றி சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்று ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. ஆனால், பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்படும் வழக்கு சொத்துக்களில் உள்ள பண்ணை வீடுகள் குறித்து பதிவு சட்டப்படி மதிப்பிட வேண்டியதில்லை. அதனால், தாவா சொத்துக்களில் வீடு உள்ளது என்றும் அதை குறிப்பிட்டு நீதிமன்றக்கட்டணம் செலுத்தவில்லை என்றும் 2–ம் பிரதிவாதி தரப்பில் வாதிடுவது சரியல்ல. வாதி அவரின் குறுக்கு விசாரணையில், தனக்கும் சேர்த்து தனது தகப்பனார் வழக்கு சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அதனால், பாகம் பிரியாத கூட்டு குடும்ப சொத்தில் ஒரு கூட்டு பாகஸ்தரின் அனுபவம் அவரின் தனிப்பட்ட அனுபவமாக கருத முடியாது. அனைத்து கூட்டு பாகஸ்தரின் அனுபவமாகத்தான் கருதவேண்டும். அதனால், வழக்கு சொத்துக்கள் தற்போது வரை உபயதரப்பினர்களின் கூட்டு அனுபவத்தில் உள்ளது. 1, 2–பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் வாதியை சேர்க்காமல், பெயரளவிற்கு ஏற்பட்ட ஆவணம் என்பதால், அது இல்லா நிலை ஆவணமாகும். அதனால், மேற்படி ஆவணம் ஏற்பட்ட தேதியின் அடிப்படையில் வாதியின் வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று 2–ம் பிரதிவாதி ஆட்சேபணை செய்துள்ளது

ஏற்கத்தக்கதல்ல. அதனால், வாதி கோரியவாறு அவரின் பாகத்தை பிரித்து கொடுக்கும் வகையில் தீர்ப்பாணை பிறப்பிக்கவேண்டும் என்று வாதிட்டார்.

1–ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வாதுரையின் சாராம்சம்

9. தாவா சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கும், அவரது பெற்றோர்களுக்கும் இடையே கடந்த 24.02.1986–தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி A அட்டவணை சொத்துக்கள் 1–ம் பிரதிவாதியின் பெற்றோருக்கும், B அட்டவணை சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது. பின்னர், A அட்டவணை சொத்துக்களை 1–ம் பிரதிவாதி பூர்வீக சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தைக் கொண்டு கடந்த 16.09.1987–தேதியில் கிரையம் பெற்றார். அதனால், வழக்குச் சொத்துக்கள் முழுவதும் பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்களாகும். வாதி கடந்த 10.06.1988–தேதியில் பிறந்தார். கடந்த 14.06.1990–தேதியில், பெயரளவிற்கு பாகப்பிரிவினை பத்திரம் தயாரித்து அதில், வாதியை குறிப்பிடாமல் 2–ம் பிரதிவாதிக்கு சொத்துக்கள் பெருமளவில் சேருவதைப்போல் பாகப்பிரிவினை பத்திரம் தயார் செய்து, 1–ம் பிரதிவாதி பதிவு செய்துள்ளார். மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் குறித்து வாதிக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் உபயவாதிகளுடைய கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருகிறது. வழக்கு சொத்துக்களில் வாதிக்கு உள்ள உரிமையை 1–ம் பிரதிவாதி மறுக்கவில்லை. அதனால், மேற்படி சங்கதிகளை அனுசரித்து தீர்ப்பு செய்யவேண்டும் என்று 1–ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்டார்.

2–ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வாதுரையின் சாராம்சம்

10. தாவா சொத்துக்கள், பாகப்பிரிவினை செய்யப்படாத கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும் தாவா சொத்துக்களில் வாதி கூட்டுஅனுபவத்தில் உள்ளதாகவும் சொல்லியுள்ளது உண்மையில்லை. கடந்த 14.06.1990–தேதியில், 1, 2–பிரதிவாதிகள் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் A அட்டவணை சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கும், B அட்டவணை சொத்துக்கள் 2–ம் பிரதிவாதிக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது. மேற்படி அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாக சொத்துக்களை 1, 2–பிரதிவாதிகள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகின்றனர். தாவா சொத்துக்கள்

பொருத்து 14.06.1990–தேதியிலேயே பாகப்பிரிவினையாகிவிட்டதால், வாதி கூட்டு குடும்ப உறுப்பினர் இல்லை. இந்து வாரிசுரிமை சட்டப்படி வாதி கூட்டுக்குடும்ப உறுப்பினர் இல்லை என்பதால், வாதிக்கு அப்போது பாக உரிமை எதுவும் இல்லை. தமிழ்நாடு அரசின் இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டம் 1989–ன்படி வாதிக்கு பாக உரிமை இருந்தாலும், அது இந்திய அரசு கொண்டு வந்த இந்து வாரிசுரிமை திருத்த சட்டம் 2005–ன் மூலம் மேற்படி தமிழ்நாடு அரசு கொண்டு வந்த இந்து வாரிசுரிமை திருத்த சட்டம் 1989–ல் ரத்து செய்யப்பட்டுவிட்டது. அதனால், மேற்படி தமிழ்நாடு அரசு கொண்டு வந்த திருத்த சட்டத்தின் அடிப்படையில், வாதிக்கு பாகம் உள்ளது என்று வாதி தரப்பில் வாதிடுவது ஏற்கத்தக்கதல்ல. வழக்கு சொத்தில் வீடு உள்ளது என்பதை வாதி அவரின் குறுக்கு விசாரணையில் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால், மேற்படி வீட்டை சொத்து விபரத்தில் காண்பிக்கவில்லை. அதனால், சொத்தின் உண்மையான விவரங்களை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யாததால் வாதியின் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி 1990–ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படி 1, 2–பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தைப்பொறுத்து அவர்கள் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டு சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்கள். ஆனால், வாதி தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதனால், தாவா சொத்துக்களில் வாதி கூட்டு அனுபவத்தில் உள்ளதாக சொல்லியுள்ளது உண்மையில்லை. வாதி அவரின் வழக்குரையில் 19.07.2022–அன்று வில்லங்கம் பார்த்தபோது, 1, 2–பிரதிவாதிகள் 1990–ல் ஏற்படுத்திக்கொண்டு பாகப்பிரிவினைப்பத்திரத்தை பற்றி தெரிந்து கொண்டாக கூறியுள்ளார். ஆனால், வாதி தரப்பில் தாக்கல் செய்த வா.சா.ஆ.1–முதல் 3–வரையான ஆவணங்கள் 18.07.2022–தேதியில் பெறப்பட்டுள்ளது. அதேபோல், வா.சா.ஆ.4–சிட்டாவை வாதி கடந்த 04.02.2022–தேதியிலேயே பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி விவரங்களிலிருந்து, மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை வாதி 19.07.02022–தேதியில் வில்லங்கம் பார்த்தபோது தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ளது உண்மையில்லை என்று தெரிய வருகிறது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டது வாதிக்கு முன்பே தெரியும் என்பதால், வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

எழுவினா 1–க்கான தீர்வு

1	முதலாவது பிரதிவாதி, கூட்டுக்குடும்ப வருமானத்திலிருந்து வந்த பணத்திலிருந்து கடந்த 24.02.1986–ம் தேதிய பாகப்பிரிவினையில் அவரது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை, கடந்த 16.09.1987–ம் தேதி கிரையம் பெற்றாரா?

11. இவ்வழக்கில் தரப்பினர்களுக்கிடையே உள்ள பிரச்சனையை பரிசீலிப்பதற்கு முன்பு தரப்பினர்கள் இவ்வழக்கில் ஏற்றுக்கொள்ளும் சங்கதிகளை முதலில் பரிசீளிக்க வேண்டியுள்ளது.

12. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சிகளையும் பரிசீலிக்கையில், வழக்கு சொத்துக்களை அடையாளம் காண்பதில் வழக்கு தரப்பினர்கள் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை. அதேபோல், வாதி குறிப்பிட்டுள்ள வழக்கு தரப்பினர்களின் உறவுமுறை குறித்தும் ஆட்சேபணை எதுவும் இல்லை. வாதி தரப்பில் கடந்த 24.12.1986–தேதியில் வாதியின் தகப்பனாரான 1–ம் பிரதிவாதியும், அவரது பெற்றோரும் அவர்களுக்கு பாத்தியமான கூட்டுக்குடும்ப சொத்துக்களைப் பொறுத்து பதிவு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றும் மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள A அட்டவணை சொத்துக்கள் வாதியின் பாட்டனார் கருப்பண்ணகவுண்டருக்கும், அவரின் மனைவி திருமாயிக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும் மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள B அட்டவணை சொத்துக்கள் வாதி மற்றும் 2–ம் பிரதிவாதியின் தகப்பனாரான, 1–ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும் பின்னர் 1–ம் பிரதிவாதி அவரின் பெற்றோர்களுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட A அட்டவணை சொத்துக்களை கடந்த 16.09.1987–தேதியில் கிரையம் பெற்றார் என்று கூறியுள்ளதையும் பிரதிவாதிகள் அவர்களின் எதிர்வழக்குரையில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

13. 1–ம் பிரதிவாதி அவரின் எதிர்வழக்குரையிலும், சாட்சியத்திலும் பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தைக்கொண்டு கடந்த 24.12.1986–தேதியில் வாதியின் பாட்டானருக்கும், பாட்டிக்கும் ஒதுக்கப்பட்ட A அட்டவணை சொத்துக்களை 1–ம் பிரதிவாதி கடந்த 16.09.1987–தேதியில் கிரையம் பெற்றார் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். மேலும், வழக்கு சொத்துக்கள் அனைத்தும் உபயதரப்பினர்களின் பாகம் பிரியாத பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால், 2–ம் பிரதிவாதி முதலில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 1–ம் பிரதிவாதி அவரின் பெற்றோரிடமிருந்து கடந்த 16.09.1987–தேதியில் கிரையம் பெற்றார் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தாலும், மேற்படி கிரையத்திற்கான தொகை பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தைக்கொண்டு கிரையம் பெற்றதாக வாதி குறிப்பிட்டுள்ளதை மறுத்து எதுவும் சொல்லவில்லை. ஆனால், 2–ம் பிரதிவாதி கடந்த 28.01.2025–தேதியில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்கள் பூராவும் பாகம் பிரியாத இந்து கூட்டு குடும்ப சொத்துக்கள் என்பது பொய்யான சங்கதிகள் என்று மட்டுமே ஆட்சேபணை செய்துள்ளார். அதேபோல், 2–ம் பிரதிவாதி அவரின் நிரூபண வாக்குமூலத்திலும், தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று கூறியுள்ளது குறித்தும் விவரம் எதுவும் சொல்லவில்லை. 2–ம் பிரதிவாதி தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்தபோது, தாவாசொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான் என்று கேட்கப்பட்டுள்ளது. ஆகவே, 2–ம் பிரதிவாதி தரப்பிலும் தாவா சொத்துக்கள் உபயதரப்பினர்களின் குடும்பத்திற்கு பாத்தியமான பூர்வீக சொத்துக்கள் என்பதை ஏற்று மேற்கண்டவாறு வாதியிடம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது தெரிய வருகிறது. மேலும், 1–ம் பிரதிவாதி கடந்த 16.09.1987–தேதியில், பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தைக்கொண்டு கிரையம் பெற்றார் என்று வாதி கூறியுள்ளதை மேற்படி கிரையத்தில் சம்பந்தப்பட்ட 1–ம் பிரதிவாதி அவரின் எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தைக்கொண்டு மேற்படி கிரையத்தை பெற்றார் என்றும் அதனால், தாவா சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்கள் என்று ஏற்றுக் கொண்டுள்ளார். அதனால், தரப்பினர்கள் தாவா சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் என்று ஏற்றுக்கொண்டுள்ளதால், 1–ம் பிரதிவாதி கூட்டுக்குடும்ப

வருமானத்திலிருந்து வந்த பணத்திலிருந்து, கடந்த 24.02.1986–தேதிய பாகப்பிரிவினையில் அவரது பெற்றோர்களுக்கு ஒதுக்கப்பட்ட A அட்டவணை சொத்தை கடந்த 16.09.1987–தேதியில் கிரையம் பெற்றார் என்றும் அதனால், 1, 2–பிரதிவாதிகள் கடந்த 16.06.1990–தேதியில் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்திற்கு முன்பு தாவா சொத்துக்கள் உபயதரப்பினர்களின் இந்து பாகம் பிரியாத பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்கள் என்று எழுவினா 1–ற்கு தீர்வு காணப்படுகிறது.

<u>எழுவினா 3, 4–க்கான தீர்வு</u>

3	வழக்குரைச்சொத்துக்களைப்பொறுத்து, கடந்த 14.06.1990–ம் தேதிதியில், பிரதிவாதிகள் செய்து கொண்ட பாகப்பத்திரம் பெயரளவிற்கு ஏற்பட்டதா?
4	வாதி, கடந்த 14.06.1990–ம் தேதிய பாகப்பிரிவினைப்பத்திரத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் பெற அருகரா?

14. மேற்கண்டவாறு எழுவினா 1–ல், 1, 2–பிரதிவாதிகள் கடந்த 16.06.1990–தேதியில் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்திற்கு முன்பு தாவா சொத்துக்கள் உபயதரப்பினர்களின் இந்து பாகம் பிரியாத பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்கள் என்று தீர்வு காணப்பட்டுள்ளது. இந்நிலையில், வாதி தரப்பில், தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதால், இந்து வாரிசு உரிமை சட்டப்படி, வழக்கு சொத்துக்களில், 3ல் ஒரு பாகம் வாதிக்கு உள்ளது என்றும், மேற்படி தாவா பூர்வீக சொத்து சம்மந்தமாக பாகம் பிரியாத நிலையில், வாதியின் உரிமையை மறைத்து கடந்த 14.06.1990–தேதியில், 1, 2 பிரதிவாதிகள் பெயரளவில் ஒரு பாகப்பிரிவினை பத்திரத்தை தயாரித்து, பதிவு செய்துள்ளார்கள் என்றும், மேற்படி ஆவணம் செல்லத்துக்கதல்ல என்றும், வாதியை கட்டுப்படுத்தாது என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், 2ம் பிரதிவாதி தரப்பில், வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக 14.06.1990–தேதியிட்ட, பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றும், இந்து வாரிசு உரிமை திருத்தச்சட்டம் 2005–க்கு முன்பு பெண் வாரிசான வாதிக்கு தாவா சொத்துக்களான பூர்வீக சொத்தில், பாக உரிமை எதுவும் இல்லை என்றும், அதனால்,

மேற்படி இந்து வாரிசு உரிமை திருத்தச்சட்டம் 2005 பிரிவு 6–ன் படி மேற்படி சட்டத்திருத்தம் வருவதற்கு முன்பு தாவா சொத்துக்கள் சம்மந்தமாக 14.06.1990–ரிலேயே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டதாலும், மேற்படி சட்டத்திருத்தத்தின்படி தமிழ்நாடு அரசு இந்து இந்து வாரிசு உரிமை திருத்தச்சட்டம் 1989–ரத்து செய்யப்பட்டு விட்டதாலும், வழக்கு சொத்துக்களில், வாதிக்கு பாக உரிமை இல்லை என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

15. மேற்படி இருதரப்பு சங்கதிகளை பரிசீலிக்கையில், வாதி தரப்பில், தாவா சொத்தை பொறுத்து 14.06.1990–தேதியில், 1, 2 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்துகொண்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால், மேற்படி ஆவணம் வழக்கு சொத்தில், வாதியின் பாக உரிமையை மறைத்து அவரை தரப்பினராக சேர்க்காமல் ஏற்ப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணம் பெயரளவிற்கு ஏற்பட்டுள்ளது என்றும், வாதி தரப்பில் மேற்படி ஆவணம் குறித்து ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி 1, 2 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட 14.06.1990 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டபோது, வழக்கு சொத்துக்களில், வாதிக்கு உள்ள பாக உரிமையை மறைத்து அவரை தரப்பினராக சேர்க்காமல், ஏற்படுத்தப்பட்டுள்ளதா? என்பதையும் மேற்படி ஆவணம் பெயரளவிற்கு ஏற்பட்டுள்ளதா? என்பதையும் பரிசீலிக்கவேண்டியுள்ளது.

16. தாவா சொத்து குறித்து, 1, 2 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட மேற்படி ஆவணம் வாதி தரப்பில், வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலிக்கையில், அதில், வாதி தரப்பினராக குறிப்பிடப்படவில்லை. மேற்படி ஆவணத்தை 1ம் பிரதிவாதியும், அப்போது மைனராக இருந்த 2ம் பிரதிவாதிக்கு கார்டியனாக அவரின் தாயார் சிந்தாமணி ஆகியோர் சேர்ந்து எழுதி பதிவு செய்துள்ளார்கள். மேற்படி ஆவணத்தின் தரப்பினரான 1ம் பிரதிவாதியும், அவரின் எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில், மேற்படி ஆவணத்தை தயாரித்து, பதிவு செய்தது ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால், மேற்படி ஆவணம் பெயரளவிற்கு எழுதப்பட்டதாக கூறியுள்ளார். ஆகவே, மேற்படி ஆவணம் எழுதப்பட்டு சட்டப்படி

பதிவும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி ஆவணம் பெயரளவிற்கு ஏற்பட்டது என்று வாதி தரப்பில் கூறியுள்ளது சரியானதா என்று பார்க்கும்போது, வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள தாவா சொத்துக்களுக்கான வா.சா.ஆ.4 கனிணி சிட்டாக்களில் பட்டா எண்.12673–ல் குறிப்பிடப்பட்டுள்ள தாவா 2 முதல் 6 வரையிலான அயிட்ட சொத்துக்கள் 2ம் பிரதிவாதி பெயரில் தனியாக ஏற்பட்டுள்ளது. அதேபோல், தாவா 7 முதல் 9 வரையிலான அயிட்ட சொத்துக்கள் சம்மந்தமாக கிணறு பொறுத்து கூட்டாக 1, 2 பிரதிவாதிகள் மற்றும் சிலரின் பெயரில் ஏற்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.4 ஆவணத்தை பார்க்கும்போது, 1, 2 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரத்தில், 2ம் பிரதிவாதிக்கு பாமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அவரின் பெயரில் தனியாக வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள கனிணி சிட்டா வழங்கப்பட்டுள்ளதும், பொதுவாக ஒதுக்கப் பட்டுள்ள கிணறு பாகம் கூட்டாக கனிணி சிட்டா வழங்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. ஆகவே, மேற்படி விவரங்களில் இருந்து வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரம் நடைமுறைக்கு வந்து அதன் அடிப்படையில்தான், மேற்படி வா.சா.ஆ.4 கணினி சிட்டா ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் 1, 2–பிரதிவாதிகளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வருவது மேற்படி ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது. ஆனால், வாதி தரப்பில் தாவா சொத்துக்களில் வாதி கூட்டு அனுபவத்தில் உள்ளார் என்று கூறியுள்ளதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி தாவா சொத்துக்களில் கூட்டு அனுபவத்தில் உள்ளார் என்பதை உரிய ஆவணங்கள் தாக்கல் செய்து, நிரூபிக்கவில்லை. அதனால், மேற்படி வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரம் நடைமுறைக்கு வந்து, அதன்படி 1, 2–பிரதிவாதிகள் அவர்களின் பாக சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்து வருவது நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி ஆவணம் பெயரளவிற்கு ஏற்பட்டது என்று மேற்படி ஆவணங்களில் உள்ள விவரங்களுக்கு எதிராக வாதியும், 1ம் பிரதிவாதியும் கூறியுள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை.

17. வா.சா.ஆ.3 ஆவணம் வாதியின் தாவா சொத்தில் உள்ள உரிமையை மறைத்து ஏற்பட்டுள்ளதால், மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று வாதி தரப்பில் கூறியுள்ளதை பரிசீலிக்கையில், மேற்படி ஆவணம் ஏற்பட்ட 14.06.1990–ல் வாதிக்கு தாவா சொத்துக்களில், பாக உரிமை உள்ளதா என்று பார்க்கும்போது, இந்திய அரசு கொண்டுவந்த இந்து வாரிசு உரிமை திருத்தச்சட்டம் 2005–ல் பிரிவு 6(1)–ல்

> 6. Devolution of interest in coparcenary property. –
>
> (1)On and from the commencement of the Hindu Succession (Amendment) Act, 2005, in a Joint Hindu family governed by the Mitakshara law, the daughter of a coparcener shall,–
>
> (a)by birth become a coparcener in her own right in the same manner as the son;
>
> (b)have the same rights in the coparcenary property as she would have had if she had been a son;
>
> (c)be subject to the same liabilities in respect of the said coparcenary property as that of a son,
>
> and any reference to a Hindu Mitakshara coparcener shall be deemed to include a reference to a daughter of a coparcener:
>
> Provided that nothing contained in this sub–section shall affect or invalidate any disposition or alienation including any partition or testamentary disposition of property which had taken place before the 20th day of December, 2004.

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி பிரிவின் சங்கதிகளை பார்க்கும்போது, இவ்வழக்கில் பூர்வீக சொத்தான தாவா சொத்துக்களில், ஆண் வாரிசுகளுக்கு உள்ள பாக உரிமையைப் போல், பெண் வாரிசான வாதிக்கும் மேற்படி 2005–திருத்தச்சட்டம் நடைமுறைக்கு வந்ததற்கு பிறகு, பாகம் உரிமை உள்ளது. அதனால், மேற்படி 2005– இந்து வாரிசு உரிமை திருத்தச்சட்டப்படி, மேற்படி சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு தாவா சொத்தான பூர்வீக சொத்துக்களில், பெண் வாரிசான வாதிக்கு பாக உரிமை எதுவும் இல்லை. அதனால், மேற்படி இந்து வாரிசு உரிமை திருத்தச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, கடந்த 14.06.1990–தேதியிட்ட வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஏற்பட்ட காலத்தில், வாதிக்கு தாவா சொத்தான பூர்வீக சொத்தில் பாக உரிமை எதுவும் இல்லை. ஆனால், வாதி தரப்பில் தமிழ்நாடு அரசு கொண்டு வந்த இந்து வாரிசு உரிமை திருத்தச்சட்டம் 1989–ன் படி மேற்படி ஆவணம் ஏற்பட்ட

தேதியில், பூர்வீக சொத்தில், வாதிக்கு பாக உரிமை உள்ளது என்றும், அதனால், மேற்படி ஆவணம் ஏற்பட்ட 1990–ல் வாதிக்கு வழக்கு சொத்துக்களில் பாக உரிமை இல்லை என்று கூறுவது சரியல்ல என்று வாதிடப்பட்டது.

18. மேற்படி சங்கதியை பரிசீலிக்கையில், மேற்படி இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டம் 2005 பிரிவு 6(5)–ல்,

> Nothing contained in this section shall apply to a partition, which has been effected before the 20th day of December, 2004.
>
> Explanation. –For the purposes of this section "partition" means any partition made by execution of a deed of partition duly registered under the Registration Act, 1908 (16 of 1908) or partition effected by a decree of a court.

என்று கூறப்பட்டுள்ளது. மேலும், இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டம் 2005–ல் தெளிவுபடுத்தி, மாண்பமை உச்ச நீதிமன்றம் வழங்கிய Vineetha Sharma V/s. Rakesh Sharma (AIR 2020 SUPREME COURT 3717)–என்ற வழக்கில்,

> 109. The Cabinet note made on 29.7.2005 with respect to 'partition' is quoted hereunder:
>
> "5.2 In this connection it may be noted that the amendments made in the Hindu Succession Act, 1956 by the States of Andhra Pradesh, Karnataka, Maharashtra and Tamil Nadu and the Kerala Joint Hindu Family System (Abolition) Act, 1975 will be superseded by any subsequent Central enactment containing provisions to the contrary as the Central legislation will prevail over the State enactments by virtue of operation of doctrine of repugnancy enunciated in article 254 of the Constitution. Innumerable settled transactions and partitions which have taken place hitherto will also become disturbed by the proposed course of action. Further, there could be heartburning from the majority of the Hindu population. In the circumstances, it is proposed that we may remove the distinction between married and unmarried daughters and at the same time clearly lay down that alienation or disposition of

property made at any time before the 20 th day of December, 2004, that is, the date on which the Hindu Succession (Amendment) Bill, 2004 was introduced in the Rajya Sabha will not be affected or invalidated. Consequential changes are also suggested in sub-section (5) of proposed section 6."

என்று கூறியுள்ளது. மேலும், மேற்படி வழக்கில்,

(ii) The rights can be claimed by the daughter born earlier with effect from 9.9.2005 with savings as provided in Section 6(1) as to the disposition or alienation, partition or testamentary disposition which had taken place before 20th day of December, 2004.

என்றும் கூறியுள்ளது. ஆகவே, மேற்படி சங்கதிகளை பார்க்கும்போது, இந்திய அரசு கொண்டு வந்த இந்து வாரிசு உரிமை திருத்தச்சட்டம் 2005-ன் மூலம் தமிழ்நாடு அரசு கொண்டுவந்த இந்து வாரிசு உரிமை திருத்தச்சட்டம் 1989-ரத்து செய்யப்பட்டு விட்டது என்பதும், 20.12.2004-க்கு முன்பு பூர்வீக சொத்துக்கள் சம்மந்தமாக சட்டப்படி பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால், பூர்வீக சொத்துக்களில் பெண் வாரிசுகளுக்கு பாக உரிமை எதுவும் இல்லை என்பதும் தெரியவருகிறது. ஆகவே, தமிழ்நாடு அரசு கொண்டு வந்த இந்து வாரிசுரிமை திருத்த சட்டம் 1989-ன்படி, வாதி வழக்கு சொத்துக்களில் பாகம் உள்ளது என்று கூறி, 2005-க்கு முன்பு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கை வாதி 2022-ல் தான் தாக்கல் செய்துள்ளார். அதனால், இந்திய அரசு கொண்டு வந்த இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டம் 2005-ன் மூலம் தமிழ்நாடு அரசு கொண்டு வந்த மேற்படி 1989- சட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டதாலும், இவ்வழக்கில் தாவா சொத்து சம்பந்தமாக வா.சா.ஆ.3-பாகப்பிரிவினை ஆவணம் 1, 2-பிரதிவாதிகளுக்கிடையே 14.06.1990- தேதியில் ஏற்பட்டுவிட்டதாலும், தாவா சொத்துக்களான பூர்வீக சொத்துக்களில் ஆண் வாரிசுகளைப்போல், பெண் வாரிசான வாதிக்கு தமிழ்நாடு அரசு கொண்டு வந்த இந்து வாரிசு உரிமை திருத்தச்சட்டம் 1989-ன் படியும், இந்திய அரசு கொண்டு வந்த இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டம் 2005-ன்படியும், வாதிக்கு வழக்கு சொத்துக்களில் பாக உரிமை இல்லை. அதனால், வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில், தாவா சொத்துக்கள் குறித்து, 1, 2 பிரதிவாதிகள் 2005-இந்து வாரிசுரிமை திருத்தச்

சட்டத்திற்கு முன்பாகவே பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளதாலும், வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரம் எழுதி சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி ஆவணம் நடைமுறைக்கு வந்துள்ளதாலும், மேற்படி ஆவணம் பெயரளவிற்கு ஏற்பட்ட ஆவணம் என்றும் வாதிக்கு தாவா சொத்துக்களில் உள்ள உரிமையை மறைத்து வா.சா.ஆ.3–ஆவணம் ஏற்பட்டதால், அது செல்லத்தக்கதல்ல என்றும் வாதி தரப்பில் கூறியுள்ளது ஏற்கத்தக்கதல்ல. மேற்படி வா.சா.ஆ.3–பாகப்பிரிவினை பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதாகும். அதனால், மேற்படி ஆவணம் பெயரளவிற்கு ஏற்பட்டது என்றும் அதனால், மேற்படி ஆவணம் இல்லா நிலையது என்றும், அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும் வாதி கோரியுள்ள பரிகாரம் பெறத்தக்கவர் அல்ல என்றும், எழுவினா 3, 4 க்கு தீர்வு காணப்படுகிறது.

<u>எழுவினா 2, 5–க்கான தீர்வு,</u>

2	வழக்குரைச்சொத்துக்களில், வாதிக்கு 1/3–பங்குள்ளதா ?
5	வாதி பாகபிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் பெற அருகரா?

19. எழுவினா 1, 3, 4–ஆகியவற்றில் வழக்கு சொத்துக்கள் உபயதரப்பினர்களின் பூர்வீக சொத்துக்கள் என்றும் வழக்கு சொத்துக்கள் குறித்து 1, 2–பிரதிவாதிகள் 14.06.1990–தேதியில் வா.சா.ஆ.3–பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றும் மேற்படி ஆவணம் பெயரளைவிற்கு ஏற்படவில்லை என்றும் அது சட்டப்படி செல்லத்தக்கது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனால், பெண் வாரிசான வாதிக்கு வழக்கு சொத்துக்கள் அனைத்திலும், மற்ற ஆண் வாரிசுகளைப் போல், பாக உரிமை இல்லை. ஆனால், தாவா சொத்துக்களான பூர்வீக சொத்துக்கள் குறித்து வாதியின் தகப்பனாரான 1–ம் பிரதிவாதியும், சகோதரரான 2–ம் பிரதிவாதியும், வா.சா.ஆ.3–ஆவணம் மூலம் பாகம் பிரித்துக்கொண்டுள்ளார்கள். மேற்படி பாகப்பிரிவினையில் பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அவர்களின் தனிப்பட்ட சொத்து இல்லை. அந்த சொத்துக்கள் பூர்வீக சொத்து என்ற நிலையிலேயே சட்டப்படி இருக்கும். அதனடிப்படையில் பார்க்கும்போது, மேற்படி ஆவணத்தின் மூலம் தாவா 1–ம் இலக்கச்சொத்து வாதியின் தகப்பனாரான 1–ம் பிரதிவாதிக்கும், 2–முதல் 10–

இலக்கச்சொத்துக்கள் 2–ம் பிரதிவாதிக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டதாக 2–ம் பிரதிவாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது, மேற்படி வா.சா.ஆ.32–பாகப்பிரிவினை பத்திரத்தை பரிசீலிக்கையில் 2–ம் பிரதிவாதி கூறியுள்ளதுபோல், தாவா 1–ம் இலக்கச்சொத்தான சர்வே எண். 17/1J புஞ்சை ஹெக்டேர். ஏர்ஸ். 0.21.0–விஸ்தீரணமுள்ள சொத்து A அட்டவணை சொத்தாக 1–ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. தாவா 2– முதல் 10–அயிட்டச்சொத்துக்கள் B அட்டவணை சொத்தாக 2–ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, 1–ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட தாவா 1–ம் அயிட்ட சொத்து பூர்வீக சொத்து என்பதால், அதில் 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளுக்கு பிரிவு 6, இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டப்படி வாதிக்கும், 1, 2– பிரதிவாதிகளுக்கும் தலா 1/3–பாகம் உரிமையுள்ளது. அதேபோல், 2–ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட தாவா 2–முதல் 10–அயிட்டச்சொத்துக்களில் 2–ம் பிரதிவாதிக்கும், அவரின் வாரிசுகளுக்கு மட்டுமே உரிமையுள்ளது. மேற்படி சொத்துக்களில் வாதிக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் பாக உரிமை எதுவும் இல்லை. அதனடிப்படையில் பார்க்கும்போது, தாவா 1ம் அயிட்டச்சொத்தில் வாதிக்கு 1/3–பாகம் உரிமையுள்ளது என்றும் தாவா 2–முதல் 10–அயிட்டச்சொத்துக்களில் பாகஉரிமை எதுவும் இல்லை என்றும் அதனால் தாவா 1–ம் இலக்கச்சொத்தில் மட்டும் வாதிக்கு 1/3–பாகம் உள்ளது என்றும் மேற்படி பாகத்தை பெறும்பொருட்டு வாதி முதல்நிலை தீர்ப்பாணை பெறத்தக்கவர் என்று எழுவினா 2 மற்றும் 5–ற்கு தீர்வு காணப்படுகிறது.

<u>எழுவினா 6–ற்கான தீர்வு,</u>

6	வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற அருகரா?

20. வாதி தரப்பில் தாவா சொத்துக்களில் வாதிக்குரிய 1/3–பாகத்தைப்பொறுத்து பிரதிவாதிகள் எவ்வித உரிமை மாற்றமும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவேண்டும் என்று கோரியுள்ளார்கள். ஆனால், மேற்கண்டவாறு எழுவினா 2 மற்றும் 5–ல், தாவா 1–ம் அயிட்ட சொத்தில் மட்டும் வாதிக்கு 1/3–பாகம் உரிமையுள்ளது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனால், தாவா 1–ம் அயிட்டச்சொத்தைப்பொறுத்து வாதி கோரியவாறு உறுத்துக்கட்டளை

பரிகாரம் பெறத்தக்கவர் ஆவார். ஆனால், தாவா 2–முதல் 10–அயிட்டச்சொத்துக்களில் வாதிக்கு பாக உரிமையில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனால், தாவா 2–முதல் 10–அயிட்டச்சொத்துக்களில் வாதி கோரியவாறு உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற அவருக்கு உரிமையில்லை. தாவா 1–ம் அயிட்டச்சொத்தில் வாதிக்கு உள்ள பாகத்தை பிரித்துக்கொடுக்காத நிலையில், அது குறித்து பிரதிவாதிகள் உரிமை மாற்றம் ஏற்படுத்தினால், அது வாதிக்கு மேற்படி சொத்தில் உள்ள பாக உரிமையை பாதிக்கும். அதனால், தாவா 1–ம் அயிட்ட சொத்தில் வாதிக்குரிய மேற்படி பாகத்தை பிரித்து கொடுக்கும் வரையில் தாவா 1–ம் அயிட்டச்சொத்தில் வாதிக்குரிய 1/3–பாகத்தைப்பொறுத்து பிரதிவாதிகள் எவ்வித உரிமை மாற்றமும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வாதி பெறத்தக்கவர் என்றும் மீதி தாவா 2–முதல் 10–அயிட்டச்சொத்துக்கள் பொறுத்து வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறத்தக்கவர் அல்ல என்றும் எழுவினா 6–ற்கு தீர்வு காணப்படுகிறது.

<u>எழுவினா 7–ற்கான தீர்வு,</u>

7	உபயதரப்பினர்கள் பெறத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன?

21. எழுவினா 1–முதல் 6–ல், தாவா 1–ம் அயிட்டச்சொத்தில் மட்டும் வாதி 1/3–பாகமும், உறுத்துக்கட்டளை பரிகாரமும் பெறத்தக்கவர் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனால், இவ்வழக்கு சங்கதிகள், தரப்பினர்களின் உறவுமுறை, அவர்களின் நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு தரப்பினர்கள் இவ்வழக்கில் மேற்கொண்டு, வேறு பரிகாரங்கள் பெறத்தக்கவர்கள் அல்ல என்றும் செலவுதொகை விதிக்க வேண்டியது இல்லை என்றும் எழுவினா 7–க்கு தீர்வுகாணப்படுகிறது.

முடிவாக, இவ்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, இவ்வழக்கு 1–ம் அயிட்டச்சொத்தை நலந்திகடு கலந்து, 3–சம பாகங்களாக பிரிவினை செய்து, அவற்றில், வாதிக்கு 1–பாகத்தை ஒதுக்கியும், தனி சுவாதீனம் கொடுக்கும் வகையில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், மேற்படி தாவா 1–ம் அயிட்டச்சொத்தில் வாதியின் 1/3–பாகத்தை வாதிக்கு பிரித்துக்கொடுக்கும் வரையில், வாதியின் 1/3–

பாகம் குறித்து பிரதிவாதிகள் எவ்வித உரிமை மாற்றமும் செய்யக்கூடாது என்று அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும், மேற்படி முதல்நிலை தீர்ப்பாணை அடிப்படையில், பிரதிவாதிகள் பாகம் பிரித்துக்கொடுக்க முன்வரவில்லை என்றால் அது குறித்து இந்நீதிமன்றத்திற்கு வாதி தெரிவித்து இறுதிநிலை தீர்ப்பாணைக்கு வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்கக்கோரலாம் என்றும் தாவா 2-முதல் 10-அயிட்டச்சொத்துக்களைப்பொறுத்தும், கடந்த 14.06.1990-தேதியில் ஏற்பட்ட தாவா பாகப்பிரிவினைப்பத்திரம் குறித்தும் வாதி கோரிய பரிகாரங்கள் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்குச்சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் நாள் அவையறியத்தீர்ப்பு பகரப்பட்டது.

S NALINAKUMAR Digitally signed by S NALINAKUMAR Date: 2026.07.27 15:25:13 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>
வா.சா.1 – திருமதி. வளர்மதி (வாதி)

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

வா.சா.ஆ.1	24.02.1986	கருப்பண்ணகவுண்டர் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல்.
வா.சா.ஆ.2	16.09.1987	1-ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்.
வா.சா.ஆ.3	14.06.1990	பிரதிவாதிகள் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினைப் பத்திரம் சான்றிட்ட நகல்.
வா.சா.ஆ.4	04.07.2022	கணினி சிட்டா (எண்ணிக்கை-2)
வா.சா.ஆ.5	22.05.2006	வாதி வளர்மதி என்பவரின் பள்ளி மாற்று சான்றின் ஜெராக்ஸ் நகல்.

<u>1, 2-பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்,</u>

பி.வா.சா.1 – திரு. கருப்பண்ணன் (1-ம் பிரதிவாதி)
பி.வா.சா.2 – திரு. மோகன்

<u>1, 2–பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

பி.சா.ஆ.1	22.09.2016	கருப்பண்ணன் எழுதிக்கொடுத்த அடமானக்கடன் பத்திரம் அசல்.
பி.சா.ஆ.2	12.07.2022	கருப்பண்ணன் பேரில் ஏற்பட்ட ரசீது அசல்.
பி.சா.ஆ.3	12.07.2022	2–ம் பிரதிவாதி கடன் தொகையை செலுத்தியதற்கான ரசீது அசல்.
பி.சா.ஆ.4	14.07.2022	2–ம் பிரதிவாதி பரமத்தி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு எழுதிக்கொடுத்த ஆதாரக்கடன் பத்திரம் சான்றிட்ட நகல்.
பி.சா.ஆ.5	20.01.2025	1–ம் பிரதிவாதி பேரில் தாவா 1–லக்கச்சொத்திற்கான சிட்டா கணினி நகல்.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.07.27 15:25:19 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.